## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,

வள்ளியூர்

2025 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 14-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 27-ம் நாள் செவ்வாய்க்கிழமை

<u>இ.ம.எண்.02/2025</u> <u>ன் அ.வ.எண்.92/2024</u>

மகாராஜன் … மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி

/எதிர்/

1) முத்து முருகன் ஆண்டி … எதிர்மனுதாரர்/ வாதி

2) சந்திரா

3) ஆறுமுகம் … எதிர்மனுதாரர்கள்/ 1, 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 26.09.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / 2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L. சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ராம்நாத் ஐயர் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையிலும், இருதரப்பு வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

### <u>உத்தரவு</u>

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 ன்கீழ் 22.01.2025 அன்று மனுதாரர்/ 2 ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில்

uploac on 23.10.2025

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.14 11:10:06 +0530

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி. அசல் வழக்கில் மனுதாரர் / 2 ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய 22.01.2025 அன்று வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் மனுதாரரின் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை. அதனால் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு எதிராக 22.01.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் தற்போதுதான் வழக்கறிஞரிடம் மேற்படி வழக்கு விபரத்தையும் கேட்டபோது, அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரியவந்தது. எனவே, 22.01.2025 அன்று மனுதாரர்/ 2 ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்சாற்றுரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. அசல் வழக்கில் 18.10.2024 அன்று இந்த எதிர்மனுதாரர் ஆஜராகி வழக்கு நடத்தி வந்து மனுதாரருக்கு பல வாய்ப்புகள் கொடுத்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்திற்காக மனுதாரருக்கு எதிராக 22.01.2025 ல் ஒருதலைபட்ச உத்தரவு

uploac on
23.10.2025
JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.14 11:10:16 +0530

பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை தொடர்ந்து வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் 2 விசாரிக்கப்பட்டு வாதி தரப்பு விவாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. 22.01.2025 அன்று மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என மனுவில் கூறியிருப்பது முற்றிலும் தவறு ஆகும். உடல்நிலை சரியில்லை என்பதை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் மருத்துவ சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் /2ம் பிரதிவாதி தரப்பில் 22.01.2025 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என காரணம் தெரிவிக்கப்பட்ட போதிலும், மேற்படி காரணத்தை நிரூபிக்க வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இருப்பினும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்காகவும், மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யபட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், அதனால் பல மனுக்கள் தாக்கல் செய்ய நேரிடும். மனு அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்த தீங்கும் ஏற்படாது.

uploac on
23.10.2025
JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.14 11:10:26 +0530

இறுதியாக, இம்மனுவானது ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/2ம் பிரதிவாதி மேற்படி தொகையை 1வது எதிர்மனுதாரர் / வாதிக்கு நேரடியாக 27.10.2025 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 28.10.2025.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 14-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

uploac on 23.10.2025
JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.14 11:10:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>- இல்லை

uploac on 23.10.2025
JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.10.14 11:10:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம், வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.02/2025 இன்

அ.வ.எண்.92/2024

தேதி.14.10.2025